**தலைப்பு 122 – காணி அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணிகள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணிகள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவுத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களின் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் அறிக்கையில் மூலதனச் சொத்துக்கள் கையேற்றல் ரூபா 44,880,064 என காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் ஆண்டின் கொள்வனவு ரூபா 285,340 என காண்பிக்கப்பட்டமையால் ரூபா 44,594,724 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரி அச்சுக்குறிப்புடன் ஒப்பிடப்பட வேண்டும். | இணங்குகின்றேன். சீராக்கம் செய்து சமர்ப்பிக்கின்றேன். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-6) ஆரம்ப மீதி ரூபா 551,851,474 ஆக இருந்த போதும் திறைசேரி அச்சிட்டுக் குறிப்பின் பிரகாரம் ஆரம்ப மீதி ரூபா 544,387,120 என காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 7,464,354 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அதில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகள் திறைசேரி இறுதிக் கணக்குகள் கூற்றின் பெறுமதிகளுடன் ஒப்பிடப்பட வேண்டும். | இணங்குகின்றேன். சீராக்கம் செய்து சமர்ப்பிக்கின்றேன். |

### 1.6.3 ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) அடியிதழ்சேர் பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 341 இன் பிரகாரம் அடியிதழ்சேர் பதிவேடு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பிரமாணத்தின் பிரகாரம் பதிவேடொன்று பேணிச் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முறைப்படுத்துவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) சேதங்கள் பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பதிவேடொன்று நாளதுவரையாக பேணிச் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்ல குறித்துக் கொள்ளப்பட்டது. |

### 1.6.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(5) | பிரமாணத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட செயல் நிமித்த கட்டுநிதி உரிய செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டிய போதும் செயல் நிமித்த கட்டுநிதி தீர்வு செய்வதற்கு 24 நாட்கள் முதல் 238 நாட்கள் வரை காலப்பகுதியொன்று எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய காலப்பகுதியில் தீர்வு செய்யப்பட வேண்டும். | தாமதத்தை தவிர்த்து எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (04) | பிரமாணத்தின் பிரகாரம் சேதத்தின் போது / விபத்தின் போது பூரண அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு 7 நாட்களுக்கு மேற்பட்ட காலம் தாமதமொன்று ஏற்படுமென எதிர்பார்த்தால் ஆரம்ப அறிக்கை உடனடியாக அனுப்ப வேண்டியதுடன் பரிசோதனையின் பின்னர் நட்டம் இடம்பெற்ற திகதி முதல் மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் இடம் பெற்ற 04 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் | குறித்த காலப்பகுதியில் பரிசோதனை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தாமத காலம் 09 மாதங்கள் முதல் 14 மாதங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. | | |
| (ஆ) | 2008 சனவரி 06 ஆந் திகதிய 05/2018 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பிரசைகள் / சேவை பட்டயத்தை தயாரிப்பதற்கும் செயற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கும் மற்றும் மதிப்பீட்டிற்காக அமைச்சினால் நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை யொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புதிய பிரஜைகள் / சேவைநாடுனர் பட்டயத்தை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 6 மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா 398,998,000 ஆன தேறிய நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 115,453,445 ஆன தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன், சேமிப்புக்கள் 35 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 (11) இன் பிரகாரம் செலவினம் தொடர்பாக முறையான ஆய்வொன்றின் பின்னர் போதியளவில் மதிப்பீடு தயாரித்தல் வேண்டும் | எதிர்பார்த்த பிரகாரம் செலவின சந்தர்ப்பங்கள் ஏற்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 3 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 3 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீடொன்று மூலம் ரூபா 108,904,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் எந்த ஒரு செயற்பாட்டிற்காகவும் ஈடுபடுத்தாமையால் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | எதிர்பார்த்த பிரகாரம் செலவின சந்தர்ப்பங்கள் ஏற்படாமை மற்றும் சிக்கனமாக பயன்படுத்தியமையால் அதிகளவு செலவினம் இடம்பெறாமை |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | -------------------------------- | -------------- | ---------------------------------------- |
| (அ) | நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை மிகைத்து எவ்வித செலவினமொன்றோ கடப்பாடொன்றோ ஏற்படுத்த முடியாத போதிலும் அமைச்சினால் 06 செலவின தலைப்புகளுக்காக நிதி ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 7,730,048 தொகைக்கு பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை மிகைத்து எவ்வித கடப்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது | மின்சாரம், நீர் மற்றும் ஏனைய பட்டியல் கொடுப்பனவு களுக்காக அடுத்த ஆண்டில் சமர்ப்பிக்கப்படுவதால் பாராளுமன்ற உறுப்பினர்களால் முகவர்கள் மூலம் திருத்த வேலைகளை மேற்கொள்வதாலும் கொடுப்பனவு செய்வதற்குள்ள தொகை அதிகரித்துள்ளதாகவும் உறுப்பினர்களின் பதவியணியினர் சேவையிலிருந்து விலகிய பின்னரும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியுள்ளதால் பொறுப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 பிரிவின் பிரகாரம் திறைசேரிக்கு அறிக்கையிடாத முன்னைய ஆண்டின் கடப்பாடு அல்லது | திறைசேரிக்கு அறிக்கையிடாத கடப்பாடு அல்லது பொறுப்புக்கள் முன்னைய ஆண்டின் செலவினமாக தீர்வு செய்யப்படக் கூடாது | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திசெம்பர் மாத உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன் நவம்பர் மாதத்திற்குரிய உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தாமதம் காரணமாக பொறுப்புக்கள் பட்டியல் உள்ளடக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| | பொறுப்புக்கள் முன்னைய ஆண்டின் செலவினமாக தீர்வு செய்யப்பட கூடாது. எனினும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படாத மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,515,122 ஆன பொறுப்புக்கள் 2020 ஆம் ஆண்டின் போது தீர்வு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பொறுப்புக்கள் பட்டியலில் சகல கொடுப்பனவு செய்யப்படாத உறுதிச்சீட்டுக்களை உள்ளடக்குவதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**2.3 அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்களை வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்கின் தனியாள் கணக்கு மீதி உறுப்பினர் கடன் பதிவேட்டில் 2019 சனவரி 01 இல் உள்ளவாறு ஆரம்ப மீதியாக பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் 5 உத்தியோகத்தர்கிளன் கடன் மீதிகளுக்கு இடையே ரூபா 200,140 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | முன்னைய ஆண்டின் இறுதி மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக முன்கொண்டு வரப்பட வேண்டும். | தவணை கிடைப்பனவு பதிவுசெய்வதில் தாமதம் இருந்ததுடன் வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் மீதியை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | இரண்டு பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்ட இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 129,045 கூட்டுத்தொகையான இடர் கடன் மீதிகள் 06 மாத காலப்பகுதியிலிருந்து இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை தீர்வு செய்ய வேண்டும். | தற்போது அக்கடன் மீதிகள் உரிய அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 420,000,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் கீழ் ரூபா 307,795,285 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட உத்தேச செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | | |
| | (i) | உரித்து புலனாய்வு உத்தியோகத்தர்கள், சட்ட மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் உட்பட 600 உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்றி தலைவர் 100 பேர் கிராம உத்தியோகத்தர்கள் உட்பட 500 வெளிக்கள உத்தியோகத்தர்களுக்காக பிம்சவிய தொடர்பான 10 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துதல். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். | மீண்டெழும் செலவினங்களின் ஒதுக்கீடு செய்துள்ள நிதிஏற்பாடு போதுமாக இல்லாமை மற்றும் உரிய உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு வேண்டுகோள் விடப்பட்ட போதும் அதற்காக உரிய அனுசரணையொன்று கிடைக்காமை காரணமாக அந்நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்த முடியவில்லை. |
| | (ii) | கணனி மற்றும் வலைப் பின்னலப்படுத்தப்பட்ட தகவல்கள் அடிப்படையொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் (பொருட்கள் மற்றும் உபகரணங்கள்) வழங்கல் 122-2-3-4-2105 செலவின தலைப்பிலிருந்து மேற்கொள்ள முடியாதென |

| | | | |
|---|---|---|---|
| | | | வெளிப்படுத்தப்பட்டதால் அச்செலவினத்தை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. |
| (iii) | காணி கொள்கை பிரிவின் மூலம் 03 சட்டங்கள் திருத்தம் செய்யப்பட்டமை தொடர்பாக உரிய நிறுவனங்கள் தொடர்புபடுத்தப்பட்டு சட்ட வரைபு மற்றும் அவதானிப்புக்கள் பெற்றுக் கொள்ளப்படாமை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். | காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டம், அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கபட உள்ளது. அரசின் காணி வங்கி கொள்கை சட்டத்தின் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளபடவில்லை. தேசிய காணி கொள்கை சட்டத்தை திருத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அரசின் அபிவிருத்தி செயற்பாடு களுக்காக தேவையான காணி தனியார், துறையினரிடமிருந்து கையேற்கும் செயன் முன்னேற்றத்திற்குரிய பின்வரும் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. | | |
| (i) | 2019 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்ட தற்போது செயற்படுத்தப்படும் கோவைகள் 8409 ஆக இருந்த போதும் இழப்பீடு செலுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ள கோவைகள் 315 ஆக இருந்தது. | செயற்திறனாக கையேற்கும் செயற்பாடொன்றை அறிமுகப்படுத்தலும் தாமதமின்றி இழப்பீடுகளை செலுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கையேற்கும் செயற்பாடு பல நிறுவனங்கள் பங்களிப்பு பெறப்பட்டு மேற்கொள்ளப்படும் சிக்கலான செயற்பாடொன்றாக இருப்பதால் கோவைக்குரிய சகல காணி துண்டுகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக அதிகமான காலம் எடுக்கின்றது. 2019 ஆம் ஆண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட கோவைகள் 21 ஆகும். |
| (ii) | 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை 1950 இன் 09 ஆம் இலக்க காணிகள் அதிகாரச் | செயற்திறனாக கையேற்கும் செயற்பாடொன்றை அறிமுகப்படுத்தலும் | செயற்படாத கோவைகளாக இனங்காணப்பட்டு கையேற்கும் தற்போதய |

| | | | |
|---|---|---|---|
| | சட்டத்தின் 38(அ) உப கட்டளை வழங்கி பூர்த்தி செய்யப்பட்ட கோவைகள் 1257 ஆக இருந்ததுடன் அக்காணி கையேற்றல் தொடர்பாக துரிதமாக இழப்பீடு செலுத்த நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் பாரிய தொகை வட்டியாக செலுத்துவதற்கு நேர்வதாக அவதானிக்கப்பட்டது. | தாமதமின்றி இழப்பீடுகளை செலுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலைமையை ஆராய்ந்து பிரதேச செயலாளர்களுக்கு நினைவூட்டல் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வட்டிக்காக மேற்கொள்ளப்பட்ட அத்தியவசியமற்ற செலவினை தவிர்ப்பதற்காக 38(அ) உப கட்டளை விநியோகிக்கப்பட்ட திகதியை அடிப்படையாக கொண்டு இழப்பீடு கொடுப்பனவு செய்வதற்கு முன்னுரிமை பட்டியலொன்று தயாரித்து அதன் பிரகாரம் இழப்பீட்டுத் தொகைக்காக நிதிஏற்பாடு விடுவிக்கும் செயற்பாடு இவ்வாண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. |
| (iii) | காணி கையேற்றல் தொடர்பாக இழப்பீட்டுத் தொகை கொடுப்பனவு செய்வதற்கு தாமதம் அடைதல் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதுடன் 2019 ஆம் ஆண்டில் இழப்பீடாக ரூபா 2,410,374,671 தொகையும் ரூபா 920,543,193 ஆன வட்டியும் செலுத்துவுதற்கு நேர்ந்தது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்த வட்டித் தொகையில் 84 சதவீதம் 22 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த கையேற்றலுக்கு ஆகும். | செயற்திறனாக கையேற்கும் செயற்பாடொன்றை அறிமுகப்படுத்தலும் தாமதமின்றி இழப்பீடுகளை செலுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கையேற்கும் நடவடிக்கைகளை பின்தொடர் நடவடிக்கைக்காக ICTA நிறுவனத்தின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டு தகவல் முறைமையொன்று தயாரிப்பதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| (iv) மீளாய்வாண்டின் போது 290 காணிகளை கையேற்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த 112 காணிகள் மாத்திரம் கையேற்கப்பட்டிருந்தமையால் பௌதீக முன்னேற்றம் 38.6 சதவீதம் போன்ற குறைவான பெறுமதியொன்று எடுத்திருந்தது. | செயற்திறனாக கையேற்கும் செயற்பாடொன்றை அறிமுகப்படுத்த வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1950 இன் 09 ஆம் இலக்க காணிகள் சட்டத்தின் 38(அ) உப கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அரசின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக காணி தனியார் துறையிலிருந்து கையேற்கும் செயற்பாடு காணி அமைச்சு, அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல்படுத்துகின்ற நிறுவனம், மதிப்பீட்டுத் திணைக்களம், பிரதேச செயலகம், நில அளவையாளர் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து செயற்படுகின்றன. 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அவ்வாறு கையேற்கப்படும் நடவடிக்கைகளுக்காக 38(அ) உப கட்டளையின் கீழ் 54 மற்றும் 38(அ) உப கட்டளையின் கீழ் 1257 என்ற வகையில் வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த 1311 கோவைகளில் 315 கோவைகளில் கோவைகளின் சேயற்பாடுகளை நிறைவேற்ற முடியுமாக இருந்தது. | அமைச்சு கையேற்கும் செயற்பாடு ஒழுங்குபடுத்தல் மற்றும் செயற்படுத்தும் நிறுவனமாக இருப்பதனால் கால நிர்ணயிப்புடன் முறையான நடைமுறையைத் தயாரிப்பதன் மூலம் கையேற்கும் செயற்பாட்டை மேற்கொள்ளலும் தாமதமின்றி இழப்பீட்டுப் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும் | கையேற்கும் செயற்பாடு பல நிறுவனங்களின் பங்களிப்பை பெற்று செய்யப்படும் செயற்பாடொன்றாக இருப்பதால் கோவைக்குரிய சகல காணிப் பகுதிகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக அதிகமான காலம் எடுக்கின்றது. |

**3.3 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) களுத்துறை வலகர கனிஷ்ட வித்தியாலயத்திற்கு விளையாட்டரங்கு ஒன்றை நிர்மாணிப்பதற்காக காணியொன்றை கையேற்றல். | | |
| டோரா ஜயசூரிய என்பவருக்கு உரித்தான 01 ஏக்கர் 03 ரூட் 34.5 பேர்ச் பொது செயற்பாட்டிற்காக கையேற்கப்பட்டதாக அறிவித்தல் 2005 யூலை மாதம் வெளியிடப்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான 14 ஆண்டுகள் கடந்திருந்த போதும் காணி கையேற்கும் செயற்பாடு எதுவும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் களுத்துறை வலயக் கல்வி பணிப்பாளரால் உத்தேச காணி தற்போது பாடசாலையின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுவதாகவும் தொடர்ந்து பாடசாலைக்கு காணி தேவையெனவும் அறிவித்திருந்தார். | கையேற்கும் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு தாமதமின்றி இழப்பீட்டுத் தொகையை செலுத்த வேண்டும் | 2015 யூலை 20 ஆந் திகதி 2 ஆம் பிரிவில் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் கணனி முறைமைப் படுத்தப்பட்ட முறைமையிலிருந்து பெற்றுக் கொண்ட அறிக்கை குறிப்பின் பிரகாரம் செயற்படாத கோவையாக கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>கல்வி அமைச்சின் ED/05/69/0208/423 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இக் காணி பாடசாலையால் தொடர்ந்தும் பயன்படுத்துவதால் மேற்படி காணியை கையேற்க புதிய கையேற்பு ஒன்றின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு விண்ணப்பத்தை அனுப்புமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதும் அக் கையேற்பு முன்மொழிவு அனுப்பி இருக்கவில்லை. அம் முன் மொழிவை மீண்டும் சமர்ப்பிக்கும் வரை கையேற்கும் செயற்பாட்டை முன்கொண்டு செல்ல முடியாதுள்ளது. |

(ஆ) காலி பத்தேகம தகவல் தொழில்நுட்பம் தொடர்பான துறைசார் கல்வி பயிற்சி நிலையத்திற்கான காணியை கையேற்றல்

--------------------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய 05 ஏக்கர் அளவிலான இக் காணியை கையேற்பதற்கு உரிய பொது செயற்பாட்டிற்காக கையேற்கப்பட்டதாக பகிரங்கப்படுத்துவதற்கான காணி கையேற்றல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2000 ஆம் ஆண்டின் போது அறிவித்தல் வெளியிடப்பட்டு 2001 ஆம் ஆண்டின் போது 38(அ) உப கட்டளையின் கீழ் கட்டளை இடப்பட்டு உடமை வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2020 சனவரி வரை ரூபா 8,000,000 நட்டஈடாக வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் 2001 முதல் 18 வருடங்களுக்காக 7 சதவீதப்படி வட்டியாக ரூபா 10,080,000 தொகை செலுத்த நேர்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | கையேற்கும் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு தாமதமின்றி இழப்பீட்டுத் தொகையை செலுத்த வேண்டும் | நி.பி 53 இன் கீழ் பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் 2010 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த போதும் இழப்பீட்டிற்காக பிரதேச செயலாளரினால் நிதி ஏற்பாட்டிற்கான விண்ணப்பத்தை 2019 யூன் 01 ஆந் திகதியே அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் இழப்பீடு செலுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்தும் நிதிஏற்பாடு இல்லாமை காரணமாக இழப்பீடு செலுத்தப்படவில்லை. இவ்வாண்டின் போது நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் இழப்பீடு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(இ) மதுகம ஆனந்த கலை கூடத்திற்கு காணி கையேற்றல்

--------------------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய 32.91 பேர்ச் காணி 2004 செப்தெம்பர் மாதத்தின் போது 38(அ) உப கட்டளையின் கீழ் கட்டளை வழங்கப்பட்டிருந்த போதும் 15 ஆண்டுகள் வரை எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கையேற்கும் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு தாமதமின்றி இழப்பீட்டுத் தொகையை செலுத்த வேண்டும் | கையேற்கும் இழப்பீட்டு தொகைக்குரிய நிதி ஏற்பாடு 2019.04.29 ஆந் திகதி பிரதேச செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இழப்பீடு கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்டு முடிவடைந்து வட்டிக் கொடுப்பனவிற்காக நிதி ஏற்பாட்டு விண்ணப்பம் கையேற்பு உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் எதிர்காலத்தில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |